# யூலை – 20 – சனி

**புனித அப்போலினாரிஸ் - ஆயர் - மறைசாட்சி**

**"எல்லா மக்களினங்களும் இவர் பெயரில் நம்பிக்கை கொள்வர்" மத்.12:21**

---

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 12 : 37 - 42

அக்காலத்தில் இஸ்ரயேல் மக்கள் இராம்சேசிலிருந்து சுக்கோத்துக்கு இடம் பெயர்ந்து சென்றனர். இவர்களில் குழந்தைகள் தவிர நடந்து செல்லக்கூடிய ஆடவர் மட்டும் ஏறத்தாழ ஆறு இலட்சம் பேர் ஆவர். மேலும் அவர்களோடு பல இனப் பெருந்திரளும், ஆட்டுமந்தை மாட்டுமந்தை என்று பெருந்தொகை யான கால்நடைகளும் புறப்பட்டுச்சென்றன. எகிப்திலிருந்து கொண்டுவந்த பிசைந்த மாவைக்கொண்டு அவர்கள் சுட்டது புளிப்பற்ற அப்பங்கள். ஏனெனில் மாவு இன்னும் புளிக்காமலிருந்தது. அவர்கள் எகிப்திலிருந்து துரத்தப்பட்டதாலும், சற்றும் தாமதம் செய்ய இயலாமற்போனதாலும் தங்களுக்கென வழியுணவு தயாரித்து வைத்திருக்கவில்லை! எகிப்தில் குடியிருந்த இஸ்ரயேல் மக்கள் அங்கு வாழ்ந்தகாலம் நானூற்று முப்பது ஆண்டுகள்! நானூற்று முப்பதாம் ஆண்டு முடிவுபெற்ற அதே நாளில் ஆண்டவரின் படைத்திரள் எல்லாம் எகிப்து நாட்டினின்று வெளியேறியது. எகிப்து நாட்டினின்று அவர்களை வெளியேறச் செய்தபோது ஆண்டவர் விழித்திருந்த இரவு இதுவே! தலைமுறைதோறும் இஸ்ரயேல் மக்கள் அனைவரும் ஆண்டவருக்கென்று திருவிழிப்பு கொண்டாட வேண்டிய இரவும் இதுவே.

**பதில்பாடல் :** என்றும் உள்ளது அவரது பேரன்பு

## நற்செய்தி : மத்தேயு 12 : 14 – 21

அக்காலத்தில், பரிசேயரோ வெளியேறி இயேசுவை எப்படி ஒழிக்கலாம் என அவருக்கு எதிராகச் சூழ்ச்சிசெய்தனர். இயேசு அதை அறிந்து அங்கிருந்து புறப்பட்டுச்சென்றார். பலர் அவருக்குப்பின் சென்றனர். அவர்களெல்லாரையும் அவர் குணமாக்கினார். தம்மைக் குறித்து வெளிப்படையாகப் பேச வேண்டாம் என அவர்களிடம் அவர் கண்டிப்பாகச் சொன்னார். இறைவாக்கினராகிய எசாயா உரைத்த பின்வரும் வாக்குகள் இவ்வாறு நிறைவேறின. "இதோ என் ஊழியர் இவர் நான் தேர்ந்து கொண்டவர். இவரே என் அன்பர் இவரால் என்நெஞ்சம் பூரிப்படைகிறது இவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன் இவர் மக்களினங்களுக்கு நீதியை அறிவிப்பார். இவர் சண்டைசச்சரவு செய்யமாட்டார். கூக்குரலிடமாட்டார். தம் குரலைத் தெருவில் எழுப்பவுமாட்டார். நீதியை வெற்றிபெறச் செய்யும்வரை, நெரிந்த நாணலை முறியார் புகையும் திரியை அணையார். எல்லா மக்களினங்களும் இவர் பெயரில் நம்பிக்கை கொள்வர்."

**தியானம்:** "ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது, ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்" (லூக்.4:18) என்ற இறைவார்த்தையின் அடிப்படையில் தூய ஆவியானவரின் அபிஷேகத்தை தனக்குள் உணர்ந்த இயேசு, கடவுள் தனக்காக இந்த உலகத்தில் வகுத்திருந்த திட்டங்களை, சித்தத்தை அறிந்து கொண்டார் என்பதை விவிலியத்தின் பின்வரும் பகுதிகள் நமக்கு அறிவுறுத்துகின்றன. அதாவது, "ஏழைகளுக்கு நற்செய்தியை அறிவிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வைபெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினார்" (லூக்.4:18-19). தூய ஆவியானவரின் அபிஷேகம் ஒன்றே இயேசுவினுடைய வாழ்க்கைக்கான திட்டத்தை அறிந்துகொள்ள உதவியது. நான் எதற்காக இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றேன்? என்னுடைய பணி என்ன? என்னுடைய வாழ்வின் இலக்கு மக்கள் யார்? என்பதை இயேசு தூய ஆவியின் துணைகொண்டு கண்டு கொண்டார். அந்த தூய ஆவியாரின் வல்லமையால் கட்டுண்ட மக்களை, நோயுற்ற மக்களை, சாத்தானின் பிடியில் இருப்பவர்களை விடுவித்தார், குணப்படுத்தினார், ஆறுதல் படுத்தினார். "கடவுள் நாசரேத்து இயேசுவின்மேல் தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும் நன்மை செய்து கொண்டே சென்றார்" (தி.ப..10:38). இத்தகைய இயேசு செய்த அற்புத செயல்பாடுகள் எல்லாம் எசாயா இறைவாக்கினர் முன்னுரைத்த மெசியா (மீட்பர்) இவர்தான் என்பதை உறுதிசெய்தன. மெசியா என்றால் நம்மை மீட்பவர் என்றும் அபிஷேகத்தைக் கொடுப்பவர் என்றும் பொருள். எனவே நம்மை தமது தூய இரத்தத்தால் மீட்ட இயேசுவை விசுவசிக்கும்போது அவர் நம் பாவங்களிலிருந்தும், பலவீனத்திலிருந்தும் மீட்டு, தூய ஆவியானவரால் நம்மையும் அபிஷேகம் செய்வார். இயேசுவை வழிநடத்திய ஆவியானவர் தாமே நம்மையும் வழிநடத்தி நமது வாழ்வுக்கான திட்டங்களை வெளிப்படுத்துவார். பாவத்தாலும், பலவீனத்தாலும், சாத்தானின் சோதனைகளாலும் கட்டுண்ட மக்களை மீட்கவும், நோய்நொடிகளிலிருந்து நம்மை குணப்படுத்தவும், வாழ்வின் நம்பிக்கைகளை வளப்படுத்தவும் அனுப்பப்பெற்ற ஆண்டவர் இயேசுதாமே நம்மை ஆசீர்வதிப்பார். "நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின்கீழ் மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்தப் பெயரும் கொடுக்கப்படவில்லை" (திபணி.4:12). எனவே இயேசுவின் நாமத்தில் நம்பிக்கைகொண்டு அவருடைய மீட்பை அனுபவிப்போம், குணம்பெற்று நலமுடன் வாழ்வோம்.